1969 செப்டம்பர் 13]

களானால் நன்றாக இருந்திருக்கும். விலையை உயர்த்தினால் நூற்பாலை பாதிக்கப்படுகிறது, கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைப் பாதிப்பு ஏற்படுகிறது. இதைத்தவிர, விசைத்தறித் துணிகள் ஏராளமாக நம்முடைய சந்தையிலே வந்து கொண்டிருக்கின்றன. நெசவாளர்களுடைய வருமானம் அதிகமாகவேண்டும், வேலை யில்லாத் திண்டாட்டம் போக வேண்டும், நம்முடைய சந்தையையும் நாம் பிடித்துக்கொண்டு மற்ற மாநிலங்களுக்கும் நம்முடைய துணிகளை அனுப்ப வேண்டுமென்றால் விசைத் தறிகளை நாம் நாடவேண்டியதுதான்.

திரு. சு. துரைசாமி : கோயம்புத்தூரில் எவ்வளவு சங்கங்கள் இருக்கின்றன ? அவற்றிலே செயல்படாமல் இருப்பவை எத்தனை? செயல்படாத சங்கங்களைத் தொடர்ந்து செயல்படச் செய்வதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோவை மாவட்டத்தில் என்று தனியாக இல்லை. மொத்தத்திலே 119 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் லிக்விடேஷன் புரசீடிங்ஸின்கீழ் வந்து இருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து கைத்தறித் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது. கைத்தறி நெசவாளர்கள் ஒரு பெரிய சமூகம், அந்தச் சமூகம் கஷ்டத்திற் குள்ளாகியிருக்கின்ற நிலையில் அதற்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன யோசனை செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முன்னாலேயே சொன்னேன். கைத்தறித் துணி விலைபோனால்தான் பரிகாரம் காண முடியும். இதற்காக கைத்தறி நெசவாளர்கள் சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேசியிருக்கிறோம். இப்பொழுது 12,500 விசைத்தறிகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. அதன்மூலம் அவர்களுக்கு வருமானம் கூடுகின்ற வாய்ப்பும் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது, அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயக் குழு

***286 வினா.—திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயக் குழு அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அக் குழு அமைக்கப்படும் ?

(உ) அக் குழுவில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் உரிய அளவுக்கு அங்கம் வகிக்க ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தராசன் : எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் இல்லாமல் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது சட்டப் பாதுகாப்புக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி ஆல் இந்தியா ஹாண்ட்லூம் போர்ட், தேவையா, தேவையில்லையா என்று பரிசிலித்தார்கள். அதற்குப் பிறகு தேவையில்லை என்று சொன்ன காரணத்தாலே அதை நிறைவேற்ற முன்வரவில்லை.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே பெரிய மில்களையே ஆரம்பிக்கின்ற இக் காலத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பெரிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண விசைத்தறி நெசவுச் சங்கங்களை நிறுவுவதற்கு வழிமுறைகள் வகுத்துக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நூற்பாலைகள் கைத்தறி நெசவுக்கு நூல் கொடுப்பதற்காக அமைக்கப்படுகின்றன. கைத்தறி சங்கங்களுக்கே கொடுத்தால் வருமானம் அதிகப்படும், வேலையில்லாத் திண்டாட்டம் வராமல் தடுக்கப்படும் என்பதால் அதைப்பற்றிப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

*** 287 வினா.—திரு. எம். பூபதி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மவுண்ட் ரோடில் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வாங்கிய கட்டடத்தை எவ்வளவு வாடகைத் தொகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(இ) தற்சமயம் சங்கம் இருக்கும் கட்டடத்திற்கு வாடகை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாடு கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்கு, சென்னை மலைச் சாலையில் சொந்தமாக வாங்கியுள்ள கட்டடத்தை மாதம் ஒன்றுக்கு ரூ. 767.50 வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

(இ) சங்கத்தின் செயலகம், எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள தன் சொந்தக் கட்டடத்திலேயே உள்ளது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இம்மாதிரி உள்ள நிலைமை எத்தனை வருடமாக இருக்கிறது ? அதை மாற்றியமைக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ? நம்முடைய சொந்தக் கட்டடத்திற்குள் வைக்காமல் ஏன் வெளியிலே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது நம்முடைய சொந்தக் கட்டடத்தில்தான் இருக்கிறது. நாம் மவுண்ட் ரோடில் வாங்கிய கட்டடத்தில் கோ-ஆப்டெக்ஸ் ஷாரி மியூஸியம் துவங்கப் பட்டது. அதற்கு 1,000 ரூபாய் வாடகை கொடுக்கப்படுகிறது. நமக்கு 767½ ரூபாய் வாடகை வருகிறது. நாம் அந்தக் கட்டடத்தை வாங்கியவுடனே அங்கே குடியிருக்கிற நபர்களை வெளியேற்ற முடியவில்லை. அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். உயர் நீதிமன்றம் நமக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதற்கு மேலே உயர்நீதிமன் றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

காஞ்சிபுரத்தில் சரிகை தயாரிக்கும் பிரிவு

* 288 **வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் கூட்டுறவுத் துறையில் சரிகை தயாரிக்கும் பிரிவு ஒன்று நிறுவப் பெற்றுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ): இல்லை.

காஞ்சிபுரத்தில் கூட்டுறவுத் துறையில் சரிகை தயாரிக்கும் பிரிவு ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு அரசு கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்ற தொடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காகிதத் தொழிற்சாலைகள்

* 289 **வினா.—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி வட்டத்தில் காகிதத் தொழிற்சாலை (Paper factory) நிறுவும் எண்ணம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

* 290 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a paper factory at Hosur Taluk; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இடமில்லை.